# ஒரு பூகம்பம் நீடித்தால் அல்லது வலுவடைந்தால்

## ஓடி விடவும்

மிக அருகில் உள்ள மேடான பகுதிக்கோ, அல்லது முடிந்தவரை கடற்கரையிலிருந்து அப்பாலுள்ள நிலப்பகுதிக்கு சென்று விடவும்.ஒரு அதிகாரப்பூர்வமான சுனாமி எச்சரிக்கைக்கு காத்திருக்க வேண்டாம்.



Tamil

WWW.CIVILDEFENCE.GOVT.NZ

ஒரு பூகம்பம்

# நீடித்தால் அல்லது வலுவடைந்தால்: ஓடி விடவும்

மிக அருகில் உள்ள மேடான பகுதிக்கோ, அல்லது முடிந்தவரை கடற்கரையிலிருந்து அப்பாலுள்ள நிலப்பகுதிக்கு சென்று விடவும். அதிகாரப்பூர்வமான சுனாமி எச்சரிக்கைக்கு காத்திருக்க வேண்டாம்.

நம்முடைய கடலோரங்கள் அனைத்திலும் சுனாமி அபாயம் உள்ளது. சரியான உடனடி நடவடிக்கைகளை தெரிந்து கொள்வதால் காயங்களை தவிர்த்து உயிர்களை காப்பாற்றலாம்.

கடற்கரைக்கு அருகில் இருக்கும் பொழுது, **நீடித்த, வலுவான** நில நடுக்கத்தை உணர்ந்தால்: **ஓடி விடுங்கள்**.

ஒரு பூகம்பம் ஒரு நிமிடத்திற்கு மேல் நீடித்தாலோ அல்லது நிமிர்ந்து நிற்பதே கடினமானாலோ, அது இயற்கையான சுனாமி எச்சரிக்கை ஆகும்.

நீங்கள் கடற்கரைக்கு அருகில் இருந்தால், அதிகாரப்பூர்வமான எச்சரிக்கைக்கு காத்திருக்க வேண்டாம். மிக அருகில் உள்ள மேடான பகுதிக்கோ, அல்லது முடிந்தவரை கடற்கரையிலிருந்து அப்பாலுள்ள நிலப்பகுதிக்கு சென்று விடவும். நடந்தோ அல்லது முடிந்தால் சைக்கிளிலோ செல்லுங்கள். எல்லாம் நீங்கியது என்ற அறிவிப்பு வரும் வரை அங்கேயே தங்கி இருங்கள்.

இன்றே ஒரு திட்டமிடுங்கள். உங்களுக்கு உதவக் கூடியவர்களையும், மற்றும் உங்கள் உதவி தேவைப்படக் கூடியவர்களையும் கண்டு பிடியுங்கள். உங்கள் உள்ளூர் குடியியல் பாதுகாப்பு அவசரநிலை மேலாண்மை குழுவிடம் உங்கள் பகுதியின் தகவல் உள்ளது.

**Civildefence.govt.nz**